Deposition of Witness Page.No.
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE KATPADI

Case No CC.195/2021

Deposition of Witness for PW1

Name : ஜான்சன்

Father's Name : இமானுவேல்

Village : காட்பாடி

Occupation : தனியார் நிறுவனம்

Age : 64

Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w rule 35,36 of Criminal rules of practice 2019. 28.09.2022

------------------------------------------------------------------------------------------

<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>

<u>முதல் விசாரணை:</u>

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். வழக்கின் சங்கதிகள் தெரியும். எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதிரி வழங்கிய காசோலை எண்– 041499 மாசா.ஆ.1 ஆகவும், அதனை நான் இந்தியன் வங்கி கிளையில் செலுத்திய சலான் மாசா.ஆ.2 ஆகவும், மேற்படி காசோலை மதிப்பு மறுக்கபட்டு திரும்பியதற்கான குறிப்பாணை மாசா.ஆ.3 ஆகவும், எதிரிக்கு அனுப்பப்பட்ட முதலாவது சட்ட அறிவிப்பு மாசா.ஆ.4 ஆகவும், அதனை எதிரி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை– 2 மாசா.ஆ.5 ஆகவும், மீண்டும் காசோலையை வங்கியில் செலுத்தி அது மதிப்பி மறுக்கப்பட்டு திரும்பியதற்கான குறிப்பாணை மாசா.ஆ.6 ஆகவும், எதிரிக்கு அனுப்பப்பட்ட இரண்டாவது சட்ட அறிவிப்பு மாசா.ஆ.7 ஆகவும், அதனை எதிரி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை மாசா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கேட்டு அனுமதிக்கபட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.